BINDER
PASTE GUM
கை வேலேக்கும்
முக்கியமான
ஒட்டு வேலேக்கும்
மிகச் சிறந்தது.
WHITEFIELD
Industries
CHANKANAI.

Registered as a Newspaper


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

WHITEFIELD'S
GUM
வைட்பீல்ட்ஸ்
கம்
பாடசாலேக்கும்
கந்தோர்
பாவனேக்கும்
மிக உகந்தது.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞ மார்கழி மீ 23 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 25 (07-01-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-42



ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரில நடந்த துப பாக்கிச் சூட்டு சம்பவங்களின் போது குண்டு பட்டு உயிரிழந்த எட்டுப்பேரில் அறுவரின் சடலங்களே மேலே காணலாம். யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைத்து இப்படங்கள் எடுக்கப் பட்டன.

### நேற்றும் இரத்ததானம்


யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ் ஆஸ்பத்திரியில் நேற்றும் இரத்ததானம் செய்யப்பட்டது.

பொதுமக்கள் தாமாகவே முன்வந்து இரத்த தானம் செய்தனர்.

25 பைந்து ரத்தம் தானம் செய்யப்பட்டது.

நேற்று முன் தினம் பொதுமக்கள் 35 பைந்து இரத்தம் தானம் செய்தது தெரிந்ததே.



ஞாயிற்றுக்கிழமை சம்பவத்தில் படுகாயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் சிலரைப் படத்தில் காணலாம்.

# வவுனியாவில் கண்ணிவெடி
# 11 படை வீரர்கள் மாண்டனர்

## பேயாடிக்கூளான்குளத்திலும் அயற் கிராமங்களிலும் தீ வைப்பு; பல இடங்களில் வானத்தாக்குதல்

— அலுவலகச் செய்தியாளர்: வனிதராஜன் —

வவுனியா, ஜன. 7

வவுனியாவில் நேற்று மாலே நான்கு மணியளவில் நிலக்கண்ணி ஒன்று வெடித்ததில் பதினெரு படை வீரர்கள் மாண்டனர். அவர்கள் ரோந்துசென்ற டிரக் புரண்டது.

வவுனியாவில் இருந்து சுமார் மூன்றுமைல் தொலேவில் உள்ள பேயாடிக்கூளான் குளத்தடியில் இந்தச் சம்பவம் நடந்தது.

கண்ணிவெடிச் சம்பவத்தின் எதிரொலியாக பேயாடிக்கூளான் குளத்தடிக்கு அருகில் உள்ள கிராமங்களில் பல வீடுகள் தீக்கிரையாகின. அதுமட்டுமன்றி வவுனியா நகரிலும் மற்றும் பல இடங்களிலும் வானத் தாக்குதல் நடந்தது.

இதேவேளே வவுனியா நகரம் நேற்றிரவு இருளில் மூழ்கிக் கிடந்தது.

நேற்று மாலே நான்கு மணியளவில் வவுனியாவிலிருந்து பேயாடிக்கூளான்குளப் பகுதியை நோக்கி படைவீரர் பட்டாளம் ஒன்று வந்துகொண்டிருந்தது.

இரண்டு ஜீப்பிலும், டிரக் ஒன்றிலும் படை வீரர்கள் வந்தனர்.

கண்ணிவெடியில் டிரக் சிக்கியது. அதில் வந்த படைவீரர்களில் பதினெரு பேர் மாண்டனர். டிரக் முற்ருக சேதமடைந்துபுரண்டுபோய்க் கிடக்கிறது. மற்றைய இரண்டு ஜீப்களிலும் வந்தவர்கள் உயிர்தப்பினர்.

பலியாகியவர்களில் ஒருவர் காப்டன் பதவி வகிக்கும் அதிகாரி. மற்றொருவர் சாரதி. ஏனேயோர் சிப்பாய்கள்.

### அனுராதபுரத்துக்கு

படுகாயமடைந்த நான்கு படைவீரர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள்.

பலியான படைவீரர்களின் சடலங்கள் வவுனியா கூட்டு இராணுவ முகாமில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து பேயாடிகூளான் குளம், அதற்கு அருகிலிருக்கும் நொச்சி

(4-ம் பக்கம் பார்க்க)

## நேற்று நண்பகலுடன் அலுவலகங்கள் பாடசாலேகள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 7

நேற்று யாழ் நகரில் சகல பாடசாலேகளும் அரச அலுவலகங்களும் நண்பகலுக்குப் பின்னர் இயங்கவில்லே.


யாழ் கச்சேரி, மாநகர சபை, நீதிமன்றங்கள், கல்வித்திணைக்களம், வங்

(4-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சி முடிவு

கொழும்பு, ஜன. 7

லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உட்பட இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளது.



சுங்கத் திணைக்கள உதவிக் கலெக்டர் திரு. செ. கணேஷ் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு முன்னர் யாழ் ஆஸ்பத்திரியில் வைத்து எடுக்கபபட்ட படம்.

## சுங்க உதவி கலெக்டர் கணேஷ் விமானம் மூலம் கொழும்புக்கு

### அவசர சிகிச்சைக்காக

யாழ்ப்பாணம், ஜன. 7

யாழ். சுங்க உதவி கலெக்டர் திரு. செல்லேயா கணேஷ், அவசர சிகிச்சைக்காக விமானம் மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்டார்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் திரு. கணேஷ் மீது ஐந்து குண்டுகள் பாய்ந்தன.

ஒன்று, மூளேயைத் தாக்கியது. இரண்டாவது, முதுகு எலும்பைத் தாக்கியது. மூன்ருவது குண்டு வயிற்றைத் துளேத்தது.

மற்ற இரண்டு குண்டுகளும் இடது, வலது கைகளேத் தாக்கின.

மூளேயைத் தாக்கிய குண்டை எடுப்பதற்காக

(4-ம் பக்கம் பார்க்க)

## லலித் இப்படிக் கூறுகிருர்!

கொழும்பு, ஜன. 7

தமிழர் விடுதலேக் கூட்டணியினரும், தீவிரவாத அமைப்பினரும் தங்கள் தேவை என்ன என்று திட்டவட்டமாகக் கூறுகின்ருர்கள் இல்லே.

அப்படிக் கூறிஞல் தானே நாம் தீர்வு காண முடியும்?

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி சொன்ஞர்.

வெளிநாட்டு ராஜதந்திரிகள் மத்தியில் அமைச்சர் நேற்றுப் பேசிஞர்.

உங்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்று தமிழர் விடுதலேக் கூட்

(4- ஆம் பக்கம் பார்க்க)

# பலாலிக்கு கூடுதல் ராணுவம்

யாழ்ப்பாணம், ஜன. 7

பலாலியில் உள்ள இராணுவமுகாமுக்கு கூடுதல் ஆயுதப்படையினர் அனுப்பப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, ஆனேயிறவு, வவுனியா முகாம்களில் இருந்தே ஆயுதப் படையினர் பலாலிக்கு அனுப்பப்பட்டனர்.

திடீர்த் தாக்குதல்களேச் சமாளிப்பதற்கு இருக்கும் படைவீரர்களுக்கு உதவுவதற்காகவே மேலதிக வீரர்கள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

இணைப்பதிகாரியின் திடீர் உத்தரவுஒன்றைத் தொடர்ந்தே மேலதிக வீரர்கள் கொண்டுவரப் பட்டனர்.

வடபகுதி முகாம்களுக்கு அருகில் போராளிகளின் நடமாட்டம் அதிகரிப்பது தெரிந்தவுடன் முகாம்களுக்கு அறிவிக்கப் படவேண்டும். போராளிகளுக்குப் பயந்தோ அல்லது உடந்தையாகவோ இருக்கும் அப்பாவி மக்களும் மன்னிக்கப்படமாட்டார்கள்' என்று இராணுவ உயர் அதிகாரி கூறிஞர்.

போராளிகளுடனை தாக்குதல்களிஞல் ஏற்படும் விளேவுகளேத் தவிர்த்துக்கொள்ள வேண்டியது பொதுமக்களின் முக்கிய கடமையாகும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

### கோட்டைக்கு அருகில் அலுவலகம்

## மாநகரசபை ஊழியர் வேலே செய்ய மறுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

கோட்டை முகாமுக்கு அருகில் உள்ள மாநகர சபை அலுவலக ஊழியர்கள் போதிய பாதுகாப்பு இல்லாத காரணத்திஞல் கடமை செய்ய முடியாது என்று நேற்று பகிஷ்கரிப்புச் செய்தனர்.

30க்கு மேற்பட்ட ஊழியர்கள் நல்லூர் இந்து விடுதியில் உள்ள ஆணையாளர் அலுவலகம் முன்பாக ஆர்பாட்டஞ் செய்தனர்.

"எமது உயிருக்கும், நம்பி வாழும் குடும்பத்

(4-ம் பக்கம் பார்க்க)

### முச்சந்திமுரளி



அப்ப இவர் அச்சாணி யாருக்கு, சுத்திச் சுத்தியும் சுப்பற்றை கொல்லேயுக்குள்ளே நிக்கிற யோசனே தான். உப்பிடியெண்டால் பிரச்சினே யாவது தீர்றதாவது!

### பண்ணேயில் நடந்த பயங்கரம்

# எமது காரை குண்டுகள் தாக்க கடலில் பாய்ந்து நீந்திஞேம்

## உயிர் தப்பியோர் தகவல்

—உதயன் செய்தியாளர்: க. இரத்தினராஜசிங்கம்—

நல்லூர், ஜன. 7

சுங்கத் திணைக்கள உதவிக் கலெக்டர் உட்பட நாங்கள் எட்டுப் பேர் ஏ. 40 கார் ஒன்றில் சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த நேரம், கோட்டைப் பக்கம் இருந்து காரை நோக்கி குண்டுகள் பாய்ந்தன. நாங்கள் காரில் இருந்து கடலில் பாய்ந்து நீந்தித் தப்பிஞேம். உதவிக் கலெக்டரும் மற்றையோரும் குண்டு பட்டு முனகும் சத்தம் கேட்டது.

பண்ணேயில் நடந்த தாக்குதல் சம்பவத்தில் உயிர் தப்பிய சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்களான திரு. எஸ். கதிரவேலு, திரு. கே. சோமசுந்தரம், திரு. எஸ். மரியதாஸ் ஆகியோர் மேற்கண்ட தகவலே உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்த

(4-ம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

07 - 01 - 1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்
11.02 முதல் 12-32 வரை
ராகு காலம்
3 32 முதல் 5-02 வரை
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## 'வாய்ஸ்' உள்ள நடிகை ஜமிலா

நடிகையரிலே ரொம்ப 'வாய்ஸ்' உள்ளவர் ஜமிலா மாலிக்தான். பூனா திரைப்படக் கல்லூரியில், நடிப்புப் பயிற்சி பெற்ற நடிகையான ஜமிலா மாலிக் 'சட்டம் என் கையில்' படத்தில் காத்ரீனை நடித்த எலிசபெத்துக்குப் பின்னணிக் குரல் கொடுத்திருக்கின்றார்.

''கோழி மிதிச்சுக் குஞ்சு சாகிறதில்லே, தெரியுமா?'' என்று அவர் கொலேக்கியலாகப் பேசுவது முதல் 'ஆராரோ' பாடுவது வரை ஏதோ அவரே பேசுவதுபோல் தோன்றும். அவ்வளவு கச்சிதமாக அவருக்குப் பின்னணிக்குரல் கொடுத்தவர் யார் தெரியுமா? ஜமிலா மாலிக்தான்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மொழிகளில் தயாரிக்கப்பட்டு ஹிந்தியில் டப் செய்யப்படும் படங்களுக்கு இவர் குரல் கொடுக்கிறாராம்.

'தசாவதாரம்' ஹிந்தியில் டப்பிங் செய்யப்பட்டபோது அந்த ஒரே படத்தில் ஆறு பேருக்கு இவர் 'வாய்ஸ்' கொடுத்திருக்கிறார்.

### கமலஹாசன் டைரக்டர்!

ஆர். சி. சக்தியின் டைரக்ஷனில் ''மனக் கணக்கு'' வளர்ந்து வருகிறது. இப்படத்தில் ராஜேஷ், அம்பிகா, ராதா ஆகியோர் நடிக்கிறார்கள்.

இப்படத்தில் குறிப்பிடக் கூடிய விஷயம், கமலஹாசன் ஒரு சினிமா டைரக்டராக நடிக்கிறார்.

விஜயகாந் ஒளிப்பதிவாளராக நடிக்கிறார். கமலும், விஜயகாந்தும் சேர்ந்து நடிப்பது இது தான் முதல் தடவை.

ஜெயலலிதா என்ற புதுமுகமும் இதில் அறிமுகமாகிறார்.

தினசரி சினிமா

# அமெரிக்க நகரங்களுக்கு தற்கொலைப் படையை அனுப்புவேன்

## லிபியா தலைவர் கடாபி அச்சுறுத்து

திரிப்போலி, ஜன.6

லிபியா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துமானால் லிபியாவின் தற்கொலைப்படை அமெரிக்க நகரங்களில் பதிலடி கொடுக்கும்.

லிபியா மேற்கண்டவாறு அமெரிக்காவுக்கு எச்சரிக்கை செய்துள்ளது. லிபிய வெளிவிவகார அமைச்சர் திரிப்போலியில் பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில் அமெரிக்காவுடன் நேருக்குநேர் சமர்செய்ய லிபியாவிடம் விமானம் தாங்கிக் கப்பல் எதுவும் கிடையாது. ஆனால் லிபியா தனது தற்கொலைப் படையை அமெரிக்க நகரங்களுக்கு அனுப்பும் என்று கூறினார்.

மத்தியதரைக் கடலில் அமெரிக்கா தனது விமானம் தாங்கிக் கப்பல்களை நிறுத்தி இருப்பதால் அமெரிக்காவும் லிபியாவும் போர் முனையின் விளிம்பில் நிற்பதாகவும் அவர் கூறினார்.

ரோம், வியன்னா விமான நிலையங்களில் சமீபத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 18பேர் மரணம் அடைந்திருந்தனர்.

இத்தாக்குதல்களின் பின்னணியில் லிபிய தலைவர் கடாபியே செயற்பட்டார் என்று அமெரிக்காவும் இஸ்ரேலும் குற்றஞ் சாட்டி உள்ளன.

லிபியாவைத் தாக்கப் போவதாக அமெரிக்கா அச்சுறுத்தியும் இருந்தது. இதனை அடுத்தே லிபியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நெருக்கடி நிலைமை தோன்றியது.

## ஆர்மெரா எரிமலை மீண்டும் குமுறுகிறது

கொலம்பியா, ஜன. 6

கொலம்பியாவில் உள்ள ஆர்மெரா எரிமலை மீண்டும் குமுறுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பரில் இந்த எரிமலை வெடித்ததில் 20,000 பேர் வரையில் மாண்டனர்.

மீண்டும் எரிமலையில் இருந்து சாம்பலும் புகையும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இதைத் தொடர்ந்து அரசஅதிகாரிகள் ஆயிரக்கணக்கானோரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# அவப்பெயர் ஏற்படுத்த சிரியா, லிபியா முயற்சி

## பி. எல். ஓ. தலைவர் அரபாத் குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஜன.6

பயங்கரவாதச் செயல்களில் பலஸ்தீனர்களை ஈடுபடுத்துவதன் மூலம் பலஸ்தீன விடுதலை இயக்கத்துககு உலக அரங்கில் அவப்பெயரை ஏற்படுத்துவதில் சிரியாவும் லிபியாவும் ஈடுபட்டுள்ளன.

இப்படி பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் குற்றஞ்சாட்டி உள்ளார்.

'வாஷிங்டன்போஸ்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே யாசீர் அரபாத் இக்குற்றச்சாட்டை வெளியிட்டார்.

ரோம், வியன்னா சர்வதேச விமான நிலையங்களில் அண்மையில் இடம் பெற்ற தாக்குதல்களின் பின்னணியில் சிரியாவும் லிபியாவும் இருந்தன என்றும் யாசீர் அரபாத் குற்றம்சுமத்தியுள்ளார்.

பலஸ்தீனிய விடுதலை இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா மறுத்து வருகின்றது.

பயங்கரவாதச் செயல்களைச் செய்வதற்காக அரபு புலனாய்வுப் பிரிவுகள் இளம் பலஸ்தீனியர்களைச் சேர்ப்பதற்கு இது தூண்டுதலாக அமைகின்றது என்று பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் கூறியுள்ளார்.

## வெளி உலகில்

### வட பாரதத்தில் கடுங்குளிர்

புதுடில்லி ஜன, 6

பாரதத்தின் வட பிராந்தியப் பகுதிகளும் கிழக்குப் பகுதிகள் சிலவும் கடுங்குளிரின் பிடியில் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குளிரின் கொடுமையால் பிகாரில் 18பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் குளிரால் இறந்தவர்களின் இறப்பு விகிதம் மேலும் கூடியுள்ளது.

உத்தரப் பிரதேசத்திலும் குஜராத் மாநிலத்திலும் மற்றும் ஜம்முகாஷ்மீர் பகுதிகளிலும் கடுமையான குளிரினால் மக்கள் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கண்ணி வெடிக்கு 2 வெள்ளையர் பலி

ஜோஹன்னஸ்பேர்க், ஜன. 6

தென் ஆபிரிக்கா — பொட்சுவானா எல்லையில், கண்ணி வெடி ஒன்று வெடித்ததில் 2 வெள்ளையர்கள் மாண்டனர்.

வேறு இருவர் காயமடைந்தனர்.

பொட்சுவானாவில் இருந்து கெரில்லாக்கள் தென் ஆபிரிக்காவுக்குள் ஊடுருவுவதாக தென் ஆபிரிக்க அரசு குற்றஞ் சாட்டி வருகின்றது.

சிம்பாப்வே எல்லையிலும் அண்மையில் கண்ணி வெடி வெடித்ததில் 6 வெள்ளையர்கள் மாண்டனர்.

### திரேசாவின் எய்ட்ஸ் நோய் இல்லம்

நியூயோர்க், ஜன. 6

அன்னை திரேசா, நியூயோர்க்கில் ஒரு இல்லத்தைத் தொடங்கி உள்ளார்.

எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களை வைத்துப் பராமரிக்கவே இந்த இல்லம் பயன்படுத்தப்படும்.

### ரஜ்னீஷ்சுவாமியின் பேராவல்

காத்மண்டு, ஜன, 6

பகவான் ரஜ்னீஷ் நேபாளத்தில் குடிசையமைத்து வாழ விரும்புகிறார்.

பத்திரிகையாளர் மாநாடொன்றில் தனது பேராவலை அவர் வெளியிட்டார்.

## யுரேனியம் தொழிற்சாலை வாயுக் கசிவு காரணமாக

### ஒருவர் மரணம் 70 பேர் பாதிப்பு

வாஷிங்டன், ஜன. 6

யுரேனியம் தொழிற்சாலையில் இருந்து ரேடியோ இயக்க கதிர் வாயுக் கசிவு ஏற்பட்டதன் காரணமாக ஒருவர் மரணமானார்.

70 பேர்களுக்கு மேல் பாதிக்கப்பட்டனர்.

வாஷிங்டனில் உள்ள யுரேனியத் தொழிற்சாலையில்தான் இவ்வாயுக் கசிவு ஏற்பட்டது.

பாதிக்கப்பட்ட 70 பேர் வரையில் கண் எரிவினால் அவதிப்பட்டனர். மேலும் பரிசோதனை செய்யப்படுவதற்காக 25பேர் ஆஸ்பத்திரியில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க அரசு இது சம்பந்தமான முழு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

## எங்களுக்கு நடக்க வேண்டியது உங்களுக்கு நடக்கிறது

### இராணுவ வீரர் இப்படி கூறினராம்

நல்லூர், ஜன.7

''எங்களுக்கு நடக்க வேண்டியது உங்களுக்கு நடக்குது.''

காயம் அடைந்த எம்மிடம் இராணுவத்தினர் இப்படித் தெரிவித்தனர்.

6 ஆம் திகதி முல்லைத்தீவு பழைய இராணுவ முகாமுக்கு அருகில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில காயம் அடைந்த இரண்டு பெண்கள் நேற்று நள்ளிரவு 12மணியளவில் யாழ். பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

ஆறுமுகம் வசந்தகுமாரி (20 வயது) எமது செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:-

சம்பவதினம் நானும் மரியாப்பிள்ளை ஞானமலர்(?0வயது) அருந்ததி (18வயது) ஆகிய மூவரும் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு நடையாக சென்று கொண்டிருந்தோம்.

அப்பொழுது எமக்கு முன்னால் சிருடையினர் நடைபவனியாகவும், வாகனங்களிலும் வந்து கொண்டிருந்தனர்.

அப்பொழுது ரோட்டில் இருந்து குண்டு ஒன்று வெடித்தது. அதைத் தொடர்ந்து துவக்குச் சூடுகளும் கேட்டன.

எனது மண்டையில் ஏதோ ஒன்று தாக்கிய போது நான் நிலத்தில் தலைகீழாகச் சுருண்டு விழுந்தேன்.

சிலநிமிடங்கள் கழித்து பார்த்தபோது சூட்டுச் சத்தங்கள் ஓய்ந்திருந்தன.

என்னுடன் வந்தமற்ற இரண்டு பேருக்கும் காயம் ஏற்பட்டது.

சீருடையினர் எம்மை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

மற்றைய இருவரையும் அவர்களது ''டிரக்''இல் ஏற்றினர்கள்.

என்னை இரண்டு சீருடையினர் கைத்தாங்கலாகத் தூக்கி ''டிரக்''கினுள் ஏற்றினர்.

''டிரக்'' ஓடிக்கொண்டிருக்கும்போது எம்மைப் பற்றி விசாரித்தனர்.

நாங்கள் சர்வோதயத்தில் கடமை புரிபவர்கள். ஆஸ்பத்திரிக்கு வந்தோம். வந்த இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது என்று அவர்களிடம் தெரிவித்தோம்.

அவர்கள் ''எங்களுக்கு நடக்க வேண்டியது.நல்ல காலம் உங்களுக்கு நடக்குது'' என்று தெரிவித்தனர்.

பின்னர் எம்மை முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தனர்.

இப்படி அவர் சொன்னார்.

ஆறுமுகம் வசந்தகுமாரிக்குத் தலையிலும், மூக்கிலும் மரியாம்பிள்ளை ஞானமலருக்குக் காலிலும் காயங்கள் ஏற்பட்டன.

மற்றவர் யாழ். வைத்தியசாலைக்கு எடுத்து வரப்படவில்லை

### மண்டைதீவு மகா வித்தியாலய புதிய கட்டடம்

திருநெல்வேலி, ஜன. 7

மண்டைதீவு மகாவித்தியாலய மாணவர்களின் வகுப்பறைப் பற்றாக்குறையை நீக்குமுகமாக சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் ஆறு வகுப்பறைகளைக் கொண்ட கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

இக்கட்டடத்திற்கான நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப் பட்டுள்ளது.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# கிளிநொச்சி முகாமை சுற்றி 2மைல் பிரதேசம் நேரடி கண்காணிப்பில்

கிளிநொச்சி, ஜன. 7

கிளிநொச்சி கூட்டுப் பாதுகாப்பு முகாமைச் சுற்றியுள்ள இரண்டு மைல் பிரதேசத்தை ஆயுதப் படையினர் தமது நேரடிக் கண்காணிப்பில் வைத்திருப்பர்.

வீதிகள் ஒழுங்கைகளைத் தெரிந்துவைத்திருப்பதற்காகவே ஆயுதப் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட இணைப்பு அதிகாரி கேணல் சொபபேகடுவ சன்னைச் சந்தித்த கிளிநொச்சிப் பிரஜைகள் தூதுக்குழுவிடம் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிளிநொச்சி, திருநகர், கனகபுரம், ஜெயந்திநகர், கணேசபுரம், பரவிப்பாஞ்சான், வட்டக்கச்சி ஆகிய கிராமங்களில் ஆயுதப்படையினர் அடிக்கடி ரோந்து வருகின்றனர். துப்பாக்கிப் பிரயோகமும் செய்கின்றனர்.

இதனால் மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

இப்படி கிளிநொச்சிப் பிரஜைகள் குழு இணைப்பதிகாரியைச் சந்தித்து தெரிவித்தது.

இரவுநேரங்களில் கிராமங்களில் ஆயுதப்படையினர் ஒளித்திருப்பது குறித்தும் பிரஜைகள் குழு, இணைப்பதிகாரியிடம் தெரிவித்தது.

இணைப்பதிகாரி பதிலளிக்கையில், 'முகாமைச் சுற்றியுள்ள இரண்டு மைல் பிரதேசத்தை எமது கண்காணிப்பில் வைத்து இருக்கவேண்டியுள்ளது.

'இதற்காக வீதிகள், ஒழுங்கைகளையும் நாம் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

'அதற்காகவே ஆயுதப்படையினர் அடிக்கடி ரோந்து செல்கின்றனர்' என்று குறிப்பிட்டார்.

இரவு நேரங்களில்கிராமங்களில் ஆயுதப் படையினர் ஒளித்து இருப்பது பற்றிய முறைப்பாடு குறித்து தான் கவனமெடுப்பதாக இணைப்பு அதிகாரி உறுதி கூறினார்.

## மின்சாரத்தை சீர் செய்யுமாறு கோரிக்கை

மானிப்பாய், ஜன.7

உடுவில் மேற்கு பகுதியினரின் மின்சாரக்குறைபாட்டை நீக்குமாறு உடுவில் மக்கள் சபையினர் சுன்னாகம் மின்சார சபையினரையும் அபிவிருத்திச் சபையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரையும் கோரியுள்ளனர்.

புதிய மின்சார உப நிலையம் ஒன்று அண்மையில் செயற்படத் தொடங்கியும் இப் பகுதியின் ஒருபிரிவு மக்களுக்கு மாலை 6மணிமுதல் இரவு 9மணி வரை மின் ஒளி மங்கலாகவே கிடைக்கின்றது என்று கூறப்படுகிறது.

# வெளியே போக வேண்டாம் என்று சொல்லியும் எனக்கு தெரியாமல் அவர் சென்றுவிட்டார்

## சனிக்கிழமை இறந்தவரின் மனைவி மரண விசாரணையில் சாட்சியம்

நல்லூர், ஜன.7

வெடிச்சத்தம் கேட்பதால் வெளியே போக வேண்டாம் என்று கணவரிடம் கூறிவிட்டுதொலைக்காட்சியில் படம் பார்க்கச் சென்றேன். பின்னர் எனது கணவர் பிரதான வீதியில் சூடுபட்டுக் கிடப்பதாக சிலர் வந்து என்னிடம் கூறினார்கள்.

சனிக்கிழமை நடந்த சம்பவத்தில் துப்பாக்கி சூட்டுக்கிலக்காகி மரணமான சென்பற்றிக்ஸ் ரோட் வாசியான மேசன் தொழிலாளி ராசு ராமச்சந்திரனின் மரண விசாரணை நேற்று நடைபெற்றது.

மரண விசாரணையில் சாட்சியமளித்த அவரது மனைவி சுவேந்தினி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

4-ஆம் திகதி சனிக்கிழமை வழமைபோல் 8 மணிக்கு எனது கணவர் மேசன் வேலைக்குச் சென்றார்.

அவர் வேலைக்குச் சென்று சிறிது நேரத்தில் யாழ் நகரப் பக்கமாக துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டன.

காலஞ் சென்றவர் 10மணிபோல் வீட்டுக்கு திரும்பி வந்து ''இன்று வேலை இல்லை'' என்று சொன்னார்.

அப்போது நான் தொலைக்காட்சியில் படம் பார்க்கப் போவதாகவும் வெடிச்சத்தங்கள் கேட்பதால் நீங்கள் ஓரிடமும் வெளிக்கிட வேண்டாம் எனவும் கணவரைக் கேட்டிருந்தேன்.

பின்னர் 12மணிபோல் எனது கணவர் பிரதான வீதியில் சூடுபட்டுக் கிடக்கிறார் என்று சிலர் வந்து கூறினார்கள்.

உடன் நான் பெரிய ராசாவையும் மாயவனையும் யாழ் பெரியாஸ்பத்திரியில் பார்த்து வரும்படி அனுப்பினேன்.

2 மணி போல் திரும்பி வந்த அவர்கள் எனது கணவர் இறந்துவிட்டார் என்று தெரிவித்தனர்.

இப்படி அவர் கூறினார்.

மரண விசாரணையை யாழ். பதில் நீதிவான் திரு.கனக கேசவன் நடத்தினார்.

தீர்ப்பு வழங்கப்படவில்லை.

## மக்கள் முகம்

### அமரர் வைத்திலிங்கம்

வாழ்க்கைப்பாதையில் 61 ஆண்டுகள் மண்ணுலகத்து வாழ்வு வாழ்ந்த அமரர். திரு. கு. சங்கரப்பிள்ளை (வைத்திலிங்கம்) விண்ணுலகு சென்ற 31 ஆவது நாள் இன்று.

35 ஆண்டுகள் ஆசிரிய சேவை செய்தவராகையால் எல்லோராலும் அறியப் பெற்றிருந்தார்.

ஆரம்பக் கல்வியை சங்கத்தானை தமிழ்ப் பாடசாலையிலும் உயர் கல்வி



யை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் கற்றார்.

பயிற்சியை முடித்து வெளியேறி பல இடங்களிலும் தமது பணியைச் செய்து இறுதியாகச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 1971இல் தமது பணியைத் தொடர்ந்தார். 1973இல் கனிஷ்ட அதிபரானார்.

இவருடைய பண்பாடு, அறிவு, அளந்து பேசும் இனிமை நிறைந்த விமரிசப்பேச்சு, பயன் கருதாச் செயல் என்பன மக்களை குறிப்பாக நண்பர்களை வசீகரித்தன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்டுழைத்தார்.

இவர் அதிபர் பதவியை ஏற்றுக் குறுகிய காலத்தில் சக ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்களின் அன்புக்குப் பாத்திரமானார்.

சாவகச்சேரி வடக்கு சமாதான சபைத் தலைவராகவிருந்து நூற்றுக்கணக்கான முறைப்பாடுகளைச் சமரசம் செய்து வைத்தார்.

ஓய்வுபெற்று ஓராண்டு பூர்த்தியாக முன் திடீரென இவருக்கு அழைப்பு வந்தது. போய்விட்டார்.

இவரின் மறைவினால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆறுதல்கூறி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

## விடுதலையான இளைஞர் வீடு வரவில்லை

நாகர்கோவில், ஜன.7

செப்டம்பர் 28-ஆம் திகதி ஆயுதப் படையினரால் ஆலங்கேணியில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர் எங்கே இருக்கின்றார் என அறியத் தருமாறு அவரது உறவினர்கள் பருத்தித்துறைப் பிரஜைகள் குழுவைக் கேட்டுள்ளனர்.

இந்த இளைஞரான செல்லையா பரராசசிங்கம் டிசம்பர்மாதம் 3ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டுவிட்டார் என்று திருகோணமலை உதவிப் பொலீஸ் அதிபர் பருத்தித்துறைப் பிரஜைகள் குழுவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளாராம்.

ஆனால் இளைஞர் இன்னும் வந்து சேரவில்லை.

## பல்கலைக் கழக கல்லூரி 17 இல் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஜன. 7

மட்டக்களப்பு வந்தாறுமூலை பல்கலைக்கழகக் கல்லூரி இவ்வருட தவணைக்காக எதிர்வரும் 17ஆம் திகதிஆரம்பமாகுமெனக் கல்லூரிப் பணிப்பாளர் அறிவித்தார்.

விடுதியில் தங்கும் சகல மாணவர்களும் 15ஆம் திகதி வருகை தந்து தங்களைப் பதிவு செய்ய வேண்டுமெனக் கேட்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

ஒரு மனிதனுக்கு இச்சைகள் இருக்கும் வரை அவனது பிறப்புச் சுழலுக்கு முடிவேயில்லை.

அந்த இச்சைகளே அவனை ஒன்றன் பின் ஒன்றாகப் பல பிறப்புக்களை எடுக்கச் செய்கின்றன.

ஒரு துண்டு கற்கண்டைச் சாப்பிட வேண்டும் என்ற விருப்பம் ஒருவனிடத்து, இருந்தாலும்கூட, அவனுக்கு மறுபிறவியுண்டு.

- அன்னை சாரதாதேவி


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805 22073

07-01-86 த. பெ. 23


## கண்காணிப்புக் குழுவை உடனே கலைக்குக

யாழ்ப்பாணத்தில் அடுத்தடுத்து இரண்டு நாட்கள் பெரும் களேபரம் நடந்து முடிந்து விட்டது. இந்த "யுத்த நிலை" இத்துடன் தணிந்து போகும் என்றோ அல்லது நிறுத்தப்படும் என்றோ சொல்வது கஷ்டம்.

ஒரு தனி மனிதன் விபத்தில் இறந்தால் கூட அது பெரும் செய்தி மதிப்புரிய விடயமாகக் கருதப்படுகிறது. அது வெளிநாடுகளில்; ஏன் தென்னிலங்கையிலும் தான்!

ஆனால் இலங்கை எனச் சொல்லப்படும் இந்த நாட்டின் தமிழ்ப் பகுதிகளில் வாழ்வோர் எத்தனை பேர் கொல்லப்பட்டாலும் அது ஓர் அற்ப விஷயமாகிவிட்டது. அதற்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டும் என்றோ நியாயப்படுத்த வேண்டும் எனவோ ஒரு தேவை இருப்பதாகத் தெரியவில்லை.

கண்காணிப்புக் குழு யாழ் குடா நாட்டில் வந்து நின்ற இரண்டு நாட்களிலும் நடந்த அமர்க்களம், ஒரு பெரும் தொடர் நிகழ்ச்சியின் ஆரம்பமோ என்று இப்பகுதி மக்கள் எல்லோரும் அஞ்சுகிறார்கள்.

செய்வதையும் செய்து விட்டு, அதனைச் சரிப்படுத்தியும், சமாளித்தும் காட்டுவது இப்போதெல்லாம் சர்வ சாதாரணமாகி விட்டது.

கண்காணிப்புக் குழு யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இருந்த வேளையில் தரைத் தாக்குதலும் விமானத் தாக்குதலும் இடம் பெற்றன.

ஆனால் அந்தக் குழு பாவம். என்ன செய்ய முடியும்? நடந்து முடிந்த சம்பவங்களை விசாரிக்கத்தான் அந்தக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் கொல்லப்பட்டால் அதனைப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு, நாட்கள் பல நகர்ந்த பின்னர் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க மட்டுமே அதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

பொது மக்கள் கொல்லப்படுவதை நிறுத்துவதற்கு என்ன செய்யலாம் என்று யோசனை தெரிவிக்கத் தானும் அதற்கு உரிமை தரப்படவில்லை.

மட்டக்களப்பில் நடந்த விசாரணையின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் இதனைக் காண முடிந்தது.

இப்படி ஒரு "பிரேத பரிசோதனை" க் குழு தேவை தானா? வெளிநாடுகளில் அரசாங்கத்தைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்காக உண்டாக்கப்பட்ட "கண் துடைப்புக்" குழு என்று கூட இதனைக் கூறலாம். பயனற்ற கண்காணிப்புக் குழுவைக் கலைத்துவிட வேண்டும்.

எமது நாட்டின் பிரதம நீதியரசர் ஒரு தமிழர். சட்டமா அதிபர் ஒரு தமிழர்.—

அவ்வாறிருக்க, தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள், அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படவில்லை என்று எப்படிக் கூறமுடியும்?— இவ்வாறு வெளி உலகத்தை ஏமாற்றுவது ஒரு முறை.

அதே வகையில், வரிசையில் உருவானது தான் கண்காணிப்புக் குழு. இது இப்போது மிகவும் தெளிவாகிவிட்டது.

இந்தக் குழுவினால் தமிழ் மக்களுக்கு எவ்வித பயனுமில்லை. மூன்று தமிழர்களையும் பேருக்குச் சேர்த்துவைத்துக் கொண்டு. அரசாங்கம் செய்யும் "பம்மாத்து" இது.

இந்தக் குழுவை நியமிப்பதில் இந்தியாவுக்கும் ஒரு பங்குண்டு. எனவே இந்தியா இனியாவது விஷயத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு, தமிழ் மக்கள் கட்டாக்காலிகள் போலச் சுட்டுக் கொல்லப்படுவதை விசாரிக்க சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டும்.

# ராஜீவின் புது நிபந்தனை

# ஜே. ஆருக்கு ஒரு பாடம்

## நிர்ப்பந்தம் ஒரு பக்கமாக இருக்காது என்பதை காட்டுகிறது

இந்தியக் குடியுரிமைத் தகுதி பெற்ற 84,000 மலையகத் தோட்டத் தொழிலாளரை தாயகம் திரும்ப அனுமதிப்பதை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நிறுத்தி வைத்துள்ளது. இலங்கை அரசாங்கத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது. இந்தியப்பிரதமர், வெளியுறவு அமைச்சர் ஆகியோர் விடுத்த எச்சரிக்கையை இலங்கை அரசு புறக்கணித்தபடியால் தான் இந்திய அரசினால் இந்த முடிவு எடுக்கப்பட்டது.



பாதுகாப்புப்படையினரின் வன்செயல்கள் அதிகரிப்பினால் இனப் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண எடுக்கப்பட்டு வந்த முயற்சிகளுக்கு ஊறு விளைவிக்கப்பட்டுள்ளது என்ற இந்தியாவின் எச்சரிக்கையைத்தான் இலங்கை புறக்கணித்தது.

திம்பு மாநாட்டை முறித்தது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியையும் விடுதலைப்போராளிகளையும் இந்தியா கண்டித்தது.

இலங்கை அரசின் நகல் திட்ட யோசனைகளுக்கான மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்க வைப்பதில் இந்தியாவின் முயற்சி பலனளித்தது.

அதற்கு இணங்க, தமிழர் விடுதலைக் கூட்டணி மாற்று யோசனைகளைச் சமர்ப்பித்தது.

இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்த மறுக்கும் போராளிகள் கூட இந்தியாவின் வற்புறுத்தலால், இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடத்த விரும்பும் ஏனைய தமிழ் அமைப்புக்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கமாட்டோம் என்று கூறினர்.

இக்கட்டத்தில் இலங்கை அரசாங்கம் வேறு ஒரு பாதையில் செல்லத் தொடங்கியது.

சமரசப் பேச்சுக்களுக்கு முட்டுக்கட்டையாக வடக்கு-கிழக்கு இணைப்புத்தான் உள்ளது என்பதை உணர்ந்தது இலங்கை அரசு.

இதன் காரணமாக கிழக்கு மாகாணம் தனது கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை இராணுவரீதியில் நிலை நிறுத்த இலங்கை அரசு தீர்மானித்தது.

விடுதலைப்போராளிகள் மனதிலும் இந்த எண்ணமே இருந்தது எனவே கிழக்கு மாகாணம் யுத்தகளமாகியது.

பஹாமாஸில நடந்த பொதுநல அமைப்பு நாடுகளின் மாநாட்டின் பின்னர், ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் அவரது மந்திரிகளும் இராணுவத் தீர்வு பற்றியே பேசத் தொடங்கினர்.

பேச்சுக்கள் மூலம் தீர்வு காணுவது பற்றிய பேச்சைக குறைத்துக் கொண்டனர்.

1986க்குள் போராளிகளை 'அழித்து' விடுவேன் என்று பி.பி.சிக்கும் 'இண்டியா ருடே' சஞ்சிகைக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தன பேட்டியளித்தார்.

பாகிஸ்தான் இராணுவ சர்வாதிகாரி ஜெனரல் ஸியா-உல்-ஹக்குக்கு 'சிவப்புக் கம்பள' வரவேற்பளித்ததை இலங்கை அரசு பெரிதாகக் காட்டியது. சகல உதவிகளையும் செய்வதாக பாகிஸ்தான் ஜனாதிபதியும் கூறிச் சென்றார்.

தான் விரும்பிய தீர்வு ஒன்றை தமிழ்த் தலைவர்களை ஏற்றுக் கொள்ள வைக்குமாறுஇந்தியாவை நிர்ப்பந்திக்கும் ஜெயவர்த்தன அரசின் முயற்சினை புதுடில்லி உணர முடிந்தது.

இந்தியா அண்மையில் எடுத்த முடிவு, நிர்ப்பந்தம்(நிபந்தனை) ஒருபக்கச் சார்பானதாக இருக்காது என்பதை இலங்கைக்கு உணர்த்தியது.

தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, அகில இந்தியாவிலுமே பேச்சுக்கள் மூலம் திருப்திகரமான தீர்வு காணப்பட வேண்டும் என்ற அபிப்பிராயம் வலுவடைந்து வருகின்றது.

பம்பாயில் அண்மையில் நடந்த காங்கிரஸ் நூற்றாண்டு மாநாட்டிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 60 ஆவது ஆண்டுக் கூட்டத்திலும் இது தெரிந்தது.

1985 ஆரம்பத்தில் காணப்பட்ட முரண்பாட்டு நிலையே 1985 இறுதியிலும் இந்திய இலங்கை உறவில் தென்பட்டது.

இந்தியாவின் மேலாதிக்கத்தனத்தை நாடாளுமன்றத்திலே பிரதமர்



பிரேமதாஸ கண்டித்ததும், பாக்கு நீரிணையில் இந்திய - இலங்கைக் கடற்படையினர் 'இறால் யுத்தம்' நடத்தியதும்—

ஜனாதிபதி ஜெயவர்த்தன தலைமையில நடந்த யு. என். பி. காரியக் கமிட்டிக் கூட்டத்தில் இலங்கையை ஆக்கிரமிக்க இந்தியா முயல்கின்றது என்று குற்றஞ் சாட்டியதும் இங்கு நினைவு கூரத் தக்கன.

இப் பேச்சுக்களின் பலன்கள் எப்படி இருக்கும் என்பதை உணர்ந்த இலங்கை அரசு, மேலும் பேச்சுக்கள் நடத்த திரு. ரொமேஷ் பண்டாரியை அனுப்பும்படி இந்தியாவைக் கேட்டுக் கொண்டது.

அச்சமயம், அதிகாரப் பரவலாக்கல், மத்திய அரசுக்குள்ள அதிகாரங்கள், காணிக் குடியேற்றம், சட்டம் - ஒழுங்கு பராமரிப்பு ஆகிய விஷயங்களில் இலங்கை அரசின் நிலையை விளக்கும்படி இந்தியா வலியுறுத்தியது.

பாதுகாப்புப் படையினரின் வன்செயல்களைக் கட்டுப்படுத்தினால் ஒழிய ரொமேஷ்பண்டாரி மீண்டும் இலங்கை வருவதால் பலன் எதுவும் இல்லை என்று இந்தியா மீண்டும் தெரிவித்தது.

மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்க வேண்டுமானால், கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும் என்று அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கை அரசாங்கமும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் சமர்ப்பித்த இரண்டு யோசனைகள் இப்பொழுது உள்ளன.

வடக்கு - கிழக்கு இணைப்புத்தான் இன்றுள்ள பிரச்சினை.

இணைப்புக்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும இருதரப்பாரும் இருப்பதாலும் சம்பந்தப்பட்டவர்கள் கலந்தாலோசிக்கப்படாததாலும் பிரச்சினை எங்கு போய் முடியுமோ சொல்ல முடியாது.

—நன்றி 'போர்வேர்ட்'—

இலங்கைத் தமிழ் அகதிகள் பத்திரமாகவும் கண்ணியமாகவும் இலங்கை திரும்பும் சூழ்நிலை ஏற்படும்வரை, இந்தியக் குடியுரிமை பெற்ற இந்தியரை இந்தியா திருப்பி எடுக்காது - என்ற இந்திய அரசின் முடிவு இலங்கை அரசுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இப்படி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆங்கில ஏடான 'போர்வேர்ட்' டில் வெளியான கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

அந்தக் கட்டுரையின் மொழிபெயர்ப்பு இங்கு தரப்பட்டுள்ளது.

### வேலணையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 7

பாவனைப் பொருள்களில் கலப்படம் தொடர்பான கருத்தரங்குகள் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஐந்து கிராமங்களில் நடைபெற உள்ளன.

வேலணை பிரதேசப் பாவனையாளர் சங்கச் செயலாளர் திரு. எஸ். பூராசா இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்.

# அருளியல் நெறியில் அரசியல் வளர்த்த முதலியார்சின்னத்தம்பி

தலத்திரு குன்றக்குடி அடிகளாரைப் போல அருளியலோடு அரசியலை அறநெறியோடு இணைத்துச் செயலாற்றி வந்தவர் எமது அகில உலக அருள்நெறி மன்றத்தின் இலங்கைக் கிளைத் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி.

7. 1. 85இல் இறைபதம் இணைந்த அன்னாரின் முதலாவது ஆண்டு நிறைவு இன்று 7. 1 86 இல் வருகிறது.

"சிறுபான்மை மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு பிரதேச சுய ஆட்சியே ஏற்றதாகும்" என்ற எமது கருத்தை சர்வோதயத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்ன அன்று ஏற்றுக் கொண்டார்.

7. 1. 85ஐ அடுத்த பெப்ரவரி 23ஆம் 24ஆம் திகதிகளில் மொரட்டுவையில் சமூக சகோதரத்துவ நல்லுறவுமாநாட்டைக் கூட்டுவதற்கான அறிக்கையைத் தயாரித்த போது மாலை 5 மணி. அந்த நேரம் தான் முதலியார் அவர்கள் ஆத்மா அமரத்துவம் பெற்றது.

ஒருமைப்பட்ட மனங்கள் றேடியோ அலைகள் போல் இயங்கும் என்பதற்கமைய முதலியார் அவர்களின் உணர்வில் இந்தப் பேச்சுவார்த்தை உணர்வு பதிவாகியிருக்கும் என உணர்கிறோம்.

தமிழ் மக்களுக்குள்ள பதற்ற நிலையைத் தவிர்த்து நியாயமான அரசியல் உரிமைகளுடன் வாழ்வதற்கு ஒரு நல்ல தீர்வு ஏற்பட வேண்டும் என்ற ஆவலில் கலாநிதி ஏ. ரி. ஆரியரத்னவுடன் பேச்சுவார்த்தை நடத்த என்னை முதலியார் அனுப்பினார்.

மாபெரும் ஊர்வலத்தில் திரண்டு நின்று சரித்திரம் படைத்தது.

காரைநகர் இந்துக் கல்லூரிவாசலிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் அனைத்துத் தொகுதிகளின் மத்திய பேரணியாகவும்— சத்திரத்தடிச் சந்தியிலிருந்து...... யாழ். கச்சேரி வாசல் வரை நிறைந்து பரந்து நின்றது.

திரு. அமிர்தலிங்கத்திடம் முதலியார் அவர்கள் சத்தியாக்கிரக அன்பளிப்பு நிதியைக் கையளித்தார்.

17-9-1951 இல் அமரர் வன்னியசிங்கம் தலைமையில் பண்ணாகத்தில் வாலிப மாநாடு நிகழ்ந்தது.

பெரியார் ஹண்டி பேரின்பநாயகத்தை தலைவராகவும் என்னைச்செயலாளராகவும் கொண்ட வாலிப முன்னணி உதயமானது.

ஹண்டி மாஸ்டரின் மாணவன் நான் என்று முதலியார் கூறிப் பெருமைப் படுவது போல கொழும்பு விவேகானந்தா அதிபர் அமரர் எஸ். மகேசனும் இதில் தீவிரமறைமுகப் பங்காற்றியதுண்டு.

1948 பெப்ரவரி 4இல் சுதந்திரதினப் பகிஷ்காரக் கூட்டம் சங்கானையில பாரதி மைதானத்தில் நிகழ்ந்தது. இதன் தொடர் 17-9-1951 இலும் 21-12-1851 இலும் வலுவடைந்தது.

### நினைத்துப் பார்ப்பவர்: க.ச. கந்தசாமி

முதலியாரின் ஆத்ம திருப்தி நிறைவுப் பணியாக அவர் விட்டுச் சென்ற பணிகளை நாம் தொடரவேண்டும்.

1958 இனக்கலவரத்தைத் தொடர்ந்து காந்திய சர்வோதயப் பேரணிகள் ஸ்தாபன ரீதியில் தேசிய ஐக்கிய மறுமலர்ச்சிப் பணிகளை முன்னெடுத்துச் சென்றன.

அமரர் வில்மட்டு பெரேரா தமது ஸ்ரீபாலேயில் சிரமதானத் தொண்டர்களை வரவேற்றுத் தேநீர் விருந்தளித்துக் கௌரவித்த போது முதலியாரின் தலைமையின் அவசியத்தை ஏ. ரி ஏக்குச் சரியாகத் தெளிவுபடுத்தி வைக்கத் தவறவில்லை.

இதன் தொடர்தான் 1961 ஆம்ஆண்டு கச்சேரி சத்தியாக்கிரகிகள் தாக்கப்பட்டதற்கு எதிராக கட்சி பேதமற்ற முறையில் வட இலங்கையிலேயேஅதிசயிக்கத்தக்க வகையில் வெகுஜன சக்தி



பொய்யாமொழி

குறள்:

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

பொருள்:

துறந்தவர்க்கும் வறியவர்க்கும் தன்னிடத்தே இறந்தவர்க்கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்கின்றவனே துணையாவான்.

## ஜ. தொ. காங்கிரஸ் பங்குபற்றமாட்டாது

யாழ்ப்பாணம், ஜன. 7

பொங்கல் முதல் புத்தாண்டுவரை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினால் நடத்தப்படவுள்ள பிரார்த்தனை இயக்கத்தில் பங்குபற்ற வேண்டாம் என்று ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தனது உறுப்பினர்களைக் கேட்டுள்ளது.

ஜ. தொ. கா. தலைவர் ஜனாப் அப்துல் அஸீஸ் இது சம்பந்தமாக அறிக்கை ஒன்றை விடுத்து இருக்கின்றார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரார்த்தனை இயக்கத்தினால் ஒரு பிரயோசனமும் ஏற்படாது.

தோட்டத்தொழிலாளரின் பிரச்சினைகள் குறித்து அரசுடன் பேச்சுக்கள் நடத்தியே தீர்வு காணவேண்டும்.

இ தொ கா. அரசாங்கத்தில் தனக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்திப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். இப்படி ஜனாப் அஸீஸ் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

கோட்டைப் பக்கம் இருந்துவரும் சூடுகளால்

# யாழ் ஆஸ்பத்திரி நோயாளர் ஊழியருக்கு பாதுகாப்பு இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 7

சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் யாழ் நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், யாழ் ஆஸ்பத்திரி நோயாளர்கள், ஊழியர்களின் பாதுகாப்புக்கு சவாலாக அமைந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

சனிக்கிழமை கோட்டைப் பக்கம் இருந்து வந்த துப்பாக்கிச்சூடுகள் ஆஸ்பத்திரி பொது நிர்வாக அலுவலகத்தைத் தாக்கின. அலுவலகச் சுவர்களில் 15 சன்னங்கள் பாய்ந்து இருந்தன.

சில சன்னங்கள் சுவரைத் துளைத்தது மட்டுமல்ல அறையினுள் வைக்கப்பட்டிருந்த ஸ்டீல் கபினட்டையும் துளைத்துக் கொண்டு சென்றன.

அச்சமயம் அங்கு [illegible] யர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள் மத்தியில் இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

சில சன்னங்களை, வைத்திய அதிகாரி ஒருவர், கண்காணிப்புக் குழு உறுப்பினர் பேராசிரியர் கா. சிவத்தம்பியிடம் கையளித்தார் என்றும்—

பேராசிரியர் சிவத்தம்பி இதை கண்காணிப்புக் குழுவிடம் [illegible] பெற்றுக் கொண்டார் என்றும் தெரிய வருகின்றது.

துப்பாக்கிப் பிரயோகங்களில் இருந்து ஆஸ்பத்திரிநோயாளர்களையும் வைத்திய அதிகாரிகளையும் பாதுகாக்கும்படி ஆஸ்பத்திரி நிர்வாகம் மேலிடத்தைக் கோரியுள்ளதாகத் தெரிகின்றது.

ஆஸ்பத்திரி நோயாளர்கள், வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள் பாதுகாப்பு அற்ற சூழ்நிலையில் இன்று உள்ளார்கள் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கூறுகின்றன.

## வாழி! நீடுழியவே!

தங்கம்மா நாமங் கொண்டே
தமிழினை வளர்க்குஞ் செல்வி
எங்குமே புகழைப் பெற்றோய்
ஏழினிற் பிறந்த செல்வி
சங்கினை ஒத்த குரலால்
சமயத்தை வளர்க்குஞ் செல்வி
சிங்கமிசை யமருந்தேவிதன் அருளால்
சீருடல் பெற்றே வாழி.

பணத்தினை நோக்கா செல்வி
பண்பினில் சிறந்த செல்வி
குணத்தின் குன்றென நிற்போய்
குவலயம் போற்றுஞ் செல்வி
இணக்கமா யிணைந்து நின்றே
ஈடற்ற பணியைச் செய்வோய்
வணக்கத்தைப் போற்றுஞ் செல்வி
வாழி நீடுழியவே.

(பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் 61வது பிறந்தநாள் இன்றாகும்.)

சி. சபாநாதன்
சங்கரத்தை, வட்டுக்கோட்டை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உங்கள் மங்கள வைபவங்கள் யாவும்
தத்ரூபமாக வீடியோ படம்
பிடித்துக்கொள்ள
யாழ்நகரில் தலைசிறந்த ஸ்தாபனம்
STUDIO DILKAH
(பஸ்நிலையம் முன் - மேல்மாடி)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்

07-01-1986

தைமாத சுபமுகூர்த்தங்களில்
3 நாளைத் தவிர
மீதி நாட்கள் பதிவாகி விட்டன
ஆகவே
உங்கள் மங்கள வைபவங்களை
வீடியோ படம் பிடிக்க இன்றே நாடுங்கள்
STUDIO DILKAH
(பஸ் நிலைய முன்-மேல் மாடியில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## வித்தாரம்

முரளித் தம்பி! என்ன யோசிக்கிறாய். இண்டைக்கும் இந்தக் கொண்டோடி அண்ணரைக் காணயில்லையே எண்டு கவலைப்படுறயாக்கும்.

ஞாயிற்றுக்கிழமை லீவு நாள். அங்கினை இங்கினை எண்டு போறதாலை உன்னைச் சந்திக்க முடியிறயில்லை அதை ஒரு லீவு நாளா வைச்சுக் கொள்ளன.

நேற்றுத் திங்கட்கிழமையும் உன்னைச் சந்திக்க முடியயில்லை. உண்மையைச் சொன்னால் என்ன. இப்ப ஒரு வியாதி ஒண்டு பரவுது. அது இந்த சீசனுக்கு வாற வியாதி எண்டுதான் டாக்குத்தர்மார் சொல்லுகினம். அதைப்பற்றி அவ்வளவு கவலைப்படத் தேவையில்லை எண்டு வைத்திய அதிகாரி ஒருதர் சொன்னார்.

ஆனால் அந்த வியாதியை அனுபவித்தால் எல்லோ அப்பா தெரியும வேதனை.

வயிற்றுப் போக்கு, லேசான காய்ச்சல், உடம்பு உளைவு குத்து, நாரிப் பிடிப்பு, இப்படிப் பல வியாதியள் சேர்ந்து ஒரு "கொம்பிளக்ஸ்" வியாதியப்பா அது.

அந்த வியாதிக்கு நான் இருக்கிறதும் தெரிஞ்சு போச்சு. உடனை வந்து சேர்ந்திட்டுது. அதாலை நேற்று வீட்டிலை படுத்த படுக்கைதான். அதாலை தான் உன்னைச் சந்திக்க முடியயில்லை.

அது இருக்கட்டும் சனியும், ஞாயிறும் யாழ்ப்பாண நகரில அடுத்துத் தொடுத்து பெரிய திருவிழாக்கள் நடக்கயிக்கை என்ன செய்தாய்? எங்கே இருந்தாய்? நீயும் ரவுண் பக்கம் போய் சிக்கலிலை மாட்டுப்படப் பாத்தியோ அல்லது அங்காலைப் பக்கமே தலைவைச்சு படுக்காமல் இருந்திட்டியோ?

நீ எப்பவும் ஒரு தீர்க்கதரிசிதானப்பா. அப்பிடி இப்பிடி எண்டு ஏதாவது எக்கச்சக்கமாக நடக்கிற நாளிலை அதிஷ்டம் அடிச்சது போல அதுகளிலை இருந்து தூர விலகி நிண்டிடுவாய. அவன் அவன் கொடுத்து வைச்சது தானை.

எப்பிடிக் கேட்டியே! என்ன என்ன எல்லாமோ எப்பிடி எப்பிடி எல்லாமோ செய்து போட்டு, தங்கடை ஊதுகுழல்களான ரி.வி., ரேடியோவிலை என்ன மாதிரி "றெக் கோட்டை" மாதிப் போட்டுக்காட்டிச்சினம்.

அவையள் நல்ல பிள்ளையள். சாதுவான பசுக்கள். ஒண்டுமே செய்யவில்லை எண்ட மாதிரித்தான் அவையின்ரை கலந்த அளப்பு. உதிலை அவை கைதேர்ந்த விண்ணர்.

அவையை விடுங்கோ. சனிக்கிழமை ரவுண் பட்டபாட்டிலை எங்கடை பொம்பிளையள் ஞாயிற்றுக்கிழமை "ஷொப்பிங்" செய்ய வெளிக்கிட்டதைப் பார்த்தாய் எண்டா! ஒவ்வொரு தோல் பாக்குகளையும் தூக்கி தோளிலை போட்டுக் கொண்டு கனகச்சிதமாய் வெளிக்கிட்டினம்.

அப்பிடி வெளிக்கிட்டவை டுமீல் சத்தம் கேட்டதும் பட்டபாடு.

நேற்றைக்கு காலையிலை நான் மினி பஸ்ஸிலை யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்தேன். இரண்டு இளம் பொம்பிளையள் கதைச்சினம். ஒரு பொம்பிளை சுமார் 6 மாதக் குழந்தையை கையிலை வைச்சிருக்கிறா அவை பேசினதைக் கேள்:

இல. 1: என்ன ரவுணுக்குப் போறியளே. நேற்று அங்கை பெரிய கரைச்சலாம்.

இல. 2: ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் கனபேர் சூடுபட்டுக் கஷ்டமாம்.

என்ன செய்யிறது. ரவுணிலை உள்ள சொந்தக்காரர் (குறிப்பிட்ட பெயரைச் சொல்லி) வீட்டை தான் போறன். போக வேண்டி இருக்கு. எப்ப எது நடக்கும் எண்டு தெரியாமல் இருக்கு. பாக்கிற காரியத்தைப் பாக்கேலாமல் இருக்க முடியுமே.

இல. 1; அது சரிதான் அப்பா. சின்னனையும் கொண்டு வெளிக்கிட்டிட்டாய் அதைத்தான் சொல்லுறன்.

இல. 2: அதுக்கு என்ன செய்யிறது. பிள்ளையை விட்டிட்டு வெளிக்கிட்டால், நான் ஒரு இடமும், பிள்ளை ஒரு இடமுமாய் இருக்கும் எண்டுதான்

இந்தச் சம்பாஷணையைக் கேட்டதும் நான் திகைச்சுப் போனேன். அதுகள் சொன்னதிலேயும் நியாயமிருக்கத் தான் செய்யுது எண்டு பிறகு நினைச்சன்.




பேச்சுவார்த்தை மூலமான

# தீர்வைக் காண சாத்தியக்கூறு குறைகிறது

## சென்னையில் தொண்டமான்

சென்னை, ஜன. 6

இலங்கை அரசும் தமிழ் போராளிகள் அமைப்புக்களும் தங்கள் நிலையில் உறுதியாக உள்ளன.

அதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட முடியாது.

பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் சாத்தியக் கூறுகளும் குறைந்து வருகின்றன.

இப்படி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் சென்னையில் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

அரசும் போராளிகள் அமைப்புக்களும் தங்கள் நிலையில் உறுதியாக உள்ளன.

விட்டுக் கொடுக்கும் எண்ணம் இரு தரப்பிலும் இல்லை. விட்டுக் கொடுக்கும் எண்ணம் இருந்தால்தான் தீர்வு காணலாம்.

இரண்டு ஆண்டுகளாக தொடரும் வன்செயல்கள் இனியும் தொடரும் போல் தோன்றுகின்றது.

இப்படி தொண்டமான் கூறினார்.

இந்தியா இனப்பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காணலாம் என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் திரு. தொண்டமான் "இந்தியா என்ன செய்ய முன்வருகிறது என்பதைப் பொறுத்து அது தங்கியுள்ளது" என்றார்.

பிரதமர் ராஜீவ் காந்தி தாயகம் திரும்பும் தோட்டத் தொழிலாளர் பற்றி தெரிவித்த கருத்துக் குறித்து அமைச்சர் தொண்டமான் அபிப்பிராயம் தெரிவிக்கையில் இந்தப் பிரச்சினை இலங்கையில் மட்டுமன்றி, இந்தியாவிலும் கவலையை ஏற்படுத்தி உள்ளது என்றார்

அமைச்சர் தொண்டமான் இன்று மின்சக்தி அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இன்று சென்னை வந்து சேர்ந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் நாளை (செவ்வாய்க்கிழமை) அமைச்சர் தொண்டமான் ஒரே விமானத்தில் டில்லி பயணம் செய்வார். அப்போது அவர் இந்தியப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கை மீது சர்வதேச நிர்ப்பந்தம்

### இந்தியா கொண்டு வர வேண்டும் என்று ஜனதாக் கட்சி தீர்மானம்

சண்டிகார், ஜன. 6

கூட்டாட்சி அமைப்பின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கைமீது சர்வதேச நிர்ப்பந்தம் கொண்டுவர இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாரதீய ஜனதாக் கட்சி, மூன்று நாள் மாநாட்டு முடிவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் நிலை மோசமாகி வருவது குறித்து தீர்மானத்தில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராளிகளை ஒடுக்குவதாகக் கூறி ஏழை மக்களைக் கொல்வதில் இலங்கை அரசு ஈடுபடுவதாகத் தெரிகின்றது. பாரதீய ஜனதாக் கட்சி தனிஈழக் கோரிக்கையை எதிர்க்கின்றது.

கூட்டாட்சி அமைப்பு அடிப்படையில் சமூக தீர்வு காணப்படவேண்டும்.

இதை அடைய இலங்கைமீது சர்வதேச நிர்ப்பந்தம் கொண்டு வரப்பட வேண்டும். இந்தியா இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

தீர்மானத்தை, கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அதல்பிஹாரி வாஜ்பாய் செய்தியாளரிடம் வெளியிட்டார்.

### றூபவாஹினி

07-01-86
செவ்வாய்க்கிழமை
மாலை

| | | |
|---|---|---|
| 5-00 | - | செய்திகள் |
| 5-05 | - | பாடசாலை விஞ்ஞானம் (தமிழ்) |
| 5-30 | - | பிளாக் பியூட்டி |
| 6-00 | - | எல்லாப் பயிற்சியும் வீணானதா? |
| 6-15 | - | உலக விவகாரப் (சிங்களம்) |
| 6-30 | - | செய்திகள் (தமிழ்) |
| 6-55 | - | சவசங்கீத |
| 7-25 | - | தடஸ் இன் கிரெடிபிள் |
| 8-00 | - | செய்திகள் (சிங்களம்) |
| 8-20 | - | தட்ஸ் இன் -கிரெடிபிள் தொடர்ச்சி |
| 8-45 | - | இசை அறிமுகம் |
| 9-00 | - | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-20 | - | சவன் மிஹீர- இசை நிகழ்ச்சி |
| 9-45 | - | சுலிவன்ஸ் |
| 10-35 | - | ஒளிபரப்பு முடிவு. |

### மாநகர சபை....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கும் யார் பொறுப்பு? - என்று அவர்கள் கோஷமிட்டார்கள்.

மாநகர மண்டபத்துக்கு அருகில் பொதுக் களஞ்சியம், வேலைத் தளம், மின்சாரக் களஞ்சியம் உள்ளன. அங்கு வேலை செய்யும் ஊழியர்களே இப்படிச் செய்தனர்.

ஆயுதப்படை முகாமிற்கு அருகில் எம்மால் வேலைசெய்ய முடியாது வேறு இடத்துக்கு மாற்றுங்கள் - இப்படி ஊழியர்கள் ஆணையாளரிடம் கேட்டனர்.

அலுவலகங்களை வேறு இடங்களுக்கு மாற்ற கால அவகாசம் ஆணையாளர் கேட்டார்.

ஊழியர்கள் அதற்கு இணங்க மறுத்தனர்.

தொடர்ந்து தனியார் கட்டடம் ஒன்றை வாடகைக்கு எடுத்து அந்த அலுவலகங்களை அங்கு மாற்ற ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரியவருகிறது.

### எமது காரை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாவது:-

சுங்கத் திணைக்கள உதவிக் கலெக்டர் உட்பட நாங்கள் எட்டுப்பேர் ஏ. 40 காரில் யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தோம்.

எமக்கு பின்னாலும் முன்னாலும் வேறுவாகனங்கள் வந்து கொண்டிருந்தன.

அப்பொழுது கோட்டைப் பக்கமாக இருந்து துப்பாக்கிச் சூடுகள் எமது காரைத் தாக்கின.

எமது காரை தொடர்ந்தும் குண்டுகள் தாக்கவே காரின் சாரதி உட்பட நாம் அனைவரும் கடலில் பாய முயற்சி செய்தோம்.

அப்போது வந்த குண்டு ஒன்று கார்ச் சாரதியையும் பின் சீற்றில் இருந்த உதவிக் கலெக்டரையும் மற்றைய ஊழியர்களையும் தாக்கியது

எம்மால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் நாம் கடலுக்குள் [illegible] கிடந்தோம்.

[illegible] அடைந்த நாம் அங்கு

"ஏசியாவீக்"
மீது தடை இல்லை
என்கிறார் அல்விஸ்

கொழும்பு, ஜன. 7

'ஏசியாவீக்' ஆங்கில சஞ்சிகை மீது தடை விதிக்கப்படவில்லை.

இப்படி ராஜாங்க அமைச்சர் டாக்டர் ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் அமைச்சரவைக் கூட்டத்தின முடிவில் செய்தியாளர்களிடம் சொன்னார்.

இச்சஞ்சிகை, இலங்கையின் அரசியல் வாதிகள் மட்டத்தில் நிலவும் ஊழல்கள் பற்றி கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது.

இது அரசியல் உயர் வட்டாரங்களில் பலத்த அதிர்ச்சியை உண்டு பண்ணியது.

இதன் காரணமாக இச்சஞ்சிகை தடைசெய்யப்படலாம் என்று ஊகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### வவுனியா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டை கிராமம் ஆகிய இடங்களில் பல வீடுகள் தீக்கிரையாகின.

#### மக்கள் காடுகளுக்குள்

அப்பகுதி மக்கள் பீதியினால் காட்டுப் பகுதியினுள் தப்பி ஓடிவிட்டார்கள்.

செய்தி அச்சுக்குப் போகும்போது அப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்றுக் கொண்டிருந்ததாக அறிய வந்தது ஹெலிக்கொப்டரிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.

பேயாடிக்கூளான் குளத்தைச் சூழ இருந்த பல கிராமங்களில் ஆங்காங்கே புகை கிளம்பிக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது

இந்தச் சம்பவத்தை அடுத்து மாலை 5 மணிக்குப் பின்னர் வவுனியா நகரில் சன நடமாட்டம் குறைந்தது. அங்கு விமானத்திலிருந்து குண்டுகள் தீர்க்கப்பட்டன.

நகரினுள் நேற்று மாலை ஏழு மணியளவில் பிரவேசித்த படையினர் தாறுமாறாக வேட்டுகளைத் தீர்த்ததாகக் கூறப்படுகிறது

இதனால் பல கடைகள் சேதமுற்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

செய்தி அச்சுக்குப் போகும்வரை இந்தச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பற்றியோ அல்லது உயிர்ச்சேதம் பற்றியோ மேலதிக விவரம் ஏதும் தெரியவில்லை.

### நேற்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிகள் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்கள், நண்பகலுடன் வீடு திரும்பி விடடனர்.

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்நகரில் இடம் பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட பரபரப்பே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது

### லலித்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டணியினரை சர்வகட்சி மாநாட்டில் வைத்துக் கேட்டோம்.

திம்புவில் வைத்து தமிழ்ப் போராளிகளிடமும் இதே கேள்வியைக் கேட்டோம்.

ஒருவரும் திட்டவட்டமான முறையில் ஒன்றையும் சமர்ப்பிக்கவில்லை. பின்னர் எப்படி நாம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்?

இப்படி அமைச்சர் கேட்டார்.

ஒரு வீட்டுக்கு சென்று எமது நிலையை எடுத்துக் கூறினோம்.

அவர்கள் எமக்கு உடுப்புகள், சாப்பாடு தந்து எம்மை உபசரித்தனர்.

காலையிலேயே யாழ். [illegible] வந்தோம்.

இப்படி அவர்கள் தெரிவித்தனர்.

## விளையாட்டரங்கு

மூன்றுவது டெஸ்டில் வெற்றிபெறும்

# இறுதி சந்தர்ப்பத்தை இந்தியா இழந்தது

### சிறிகாந்த், கபில் சிறந்த வீரர்களாகத் தெரிவு

சிட்னி, ஜன. 7

ஆஸ்திரேலிய இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது இறுதி கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டம் முன்னர் எதிர்பார்த்தபடி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

நேற்று இறுதி நேரத்தில் வெற்றி பெறுவதற்கு இந்தியாவுக்கு கிடைத்த வாய்ப்பை இந்திய அணி இறுதி நேரத்தில் கோட்டை விட்டது.

அவுஸ்திரேலியாவின் நடுவரிசை துடுப்பாட்ட வீரர்கள் விக்கெட்டை இழக்காமல் தடுத்து ஆடி தமது அணியை தோல்வியிலிருந்து காப்பாற்றிக் கொண்டனர்.

இந்த ஆட்டத்தின் முதல் நான்கு நாள் ஆட்டத்தில் இருதரப்பினரும் மொத்தம் எட்டு விக்கெட்டுக்களை மட்டுமே வீழ்த்தினார்கள்.

ஆனால நேற்றைய ஆட்டத்தில் இந்திய வீரர்கள் மொத்தம் 12 விக்கெட்டுகளை வீழ்த்தி பரபரப்பை ஏற்படுத்தினார்கள்.

நான்காம் நாள் ஆட்ட இறுதியில் 4 விக்கெட் இழப்புக்கு 347 ஓட்டங்களை பெற்றிருந்த ஆஸி அணி நேற்று தனது ஆட்டத்தைத் தொடர்ந்தது.

காலை ஆட்டத்தில் இந்திய சுருள் பந்து வீச்சு தாள் பறந்தது. ஆஸி அணியின் முதல் இன்னிங்ஸின் இறுதி நான்கு விக்கெட்டுகளும் 9 ஓட்டங்களுக்குள் சரிக்கப்பட்டன

ஷிவலால் யாதவ்வின் பந்து வீச்சுக்குத் திணறிய ஆஸி அணி 396 ஓட்டங்கள் மட்டும் எடுத்து முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை இழந்தது.

ஆஸி தரப்பில் நேற்று போர்டர் 71 ஓட்டங்களுடனும் கிரெய்க் மத்தியூஸ் 40 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

யாதவ் 5 விக்கெட்டுகளையும் ரவிசாஸ்திரி 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

இந்திய அணியிலும் பார்க்க 200 ஓட்டங்களுக்கு மேல் குறைவாக ஆஸி அணி முதல இன்னிங்ஸில் எடுத்தது. இதனால் இரண்டாவது இன்னிங்ஸ் தொடர்ந்து தடுப்பெடுத்தாடும் படி ஆஸி அணியை இந்திய அணித் தலைவர் வேண்டினார்.

இன்னிங்ஸ் தோல்வியிலிருந்து தப்புவதற்கு 204 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸிக்கு அடுத்தடுத்து இடிவிழுந்தது.

முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் மூவரின் விக்கெட்டுகள் இந்திய பந்து வீச்சுக்கு மளமள வென்று சரிந்தன.

அந்த நேரத்தில் இந்திய அணி வெற்றியீட்டுவதற்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது

ஆனால் அந்த வாய்ப்பை ஆஸி நடுவரிசை துடுப்பாட்ட வீரர்கள் சிதறடித்து விட்டனர்.

அவர்கள் ஆடிய துடுப்பாட்டத்தினால் ஆஸியின் இரண்டாவது இன்னிங்ஸின் முழு விக்கெட்டுகளையும் இந்தியாவால் வீழ்த்த முடியவில்லை.

ஆட்டம் முடியும் போது ஆஸி 6 விக்கெட் இழப்புக்கு 119 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இரண்டாவது இன்னிங்ஸிலும் யாதவ், ரவிசாஸ்திரி ஆகியோரின் பந்துவீச்சு ஆஸி துடுப்பாட்ட வீரர்களை மிரள வைத்தது. இருவரும் தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்த டெஸ்ட் போட்டியில் தனது முதலாவது செஞ்சுரியை அடிக்க சிறிகாந்த் ஆட்டத்தின் சிறப்பு வீரராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சிறிகாந்தும் அணித் தலைவர் கபில்தேவும் ஆட்டத் தொடரின் சிறப்பு வீரர்களாகத் தெரிவாகினர்.

இந்த ஆட்டத் தொடர் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தற்கு காலநிலையே காரணமாகும். மழை காரணமாக இந்த ஆட்டத் தொடரின் கடைசி இரண்டு ஆட்டங்களும் அடிக்கடி இடைநிறுத்தப் பட்டன என்பது தெரிந்ததே.

### சுங்க உதவி கலெக்டர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஆஸ்பத்திரியில் ஞாயிறு இரவு அவசரம் அவசரமாகச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப் பட்டது. முதுகு எலும்பில் பதிந்த குண்டு அப்படியே விடப்பட்டுள்ளது,

சத்திர சிகிச்சைக்குப் பின்னர் அவருக்கு நினைவு வந்தது. தனது மகன் ரவியை அழைத்து சில வார்த்தைகள் பேசினார்.

பகல் அம்புலன்ஸ் மூலம் பலாலிக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து விசேஷ விமானம் மூலம் இரத்மலானை விமான நிலையத்துக்குக் கொண்டு போகப்பட்டார்.

உடனடியாக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் நரம்புச் சிகிச்சைப் பிரிவில் திரு. கணேஷ் சேர்க்கப்பட்டார்.

பிரதம சுங்கக் கலெக்டர் திரு. எச். ஈ. திசநாயக்கா, திரு. கணேஷைக் கொழும்புக்குக் கொண்டு போவதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருந்தார்.

முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோவும் இரத்மலானை விமான நிலையத்துக்கு வந்திருந்தார்.

### அறுவரின் மரண விசாரணை நேற்று நடந்தது

நல்லூர், ஜன. 7

ஞாயிற்றுக்கிழமை நடந்த சம்பவங்களில் மரணமானவர்களில் அறுவரின் மரண விசாரணைகள் நேற்று நடைபெற்றன.

- ★ செபமாலை கேவதாசன் (சுங்கத்திணைக்கள அதிகாரி)
- ★ தர்பலிங்கம் திலகேந்திரன் (சுங்கத் திணைக்கள அதிகாரி)
- ★ செ. சந்திரதாசன்
- ★ திருமதி. அகிருபவதி

ஆகியோரது மரண விசாரணைகளை மரண விசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினார்.

- ★ எஸ் அன்னலிங்கம்.
- ★ க. கேதீஸ்வரசர்மா.

ஆகியோரது மரண விசாரணைகளை யாழ் பதில் நீதவான் திரு. அன்ரனி நடத்தினார்.

இரண்டு பேரின் சடலங்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படவில்லை. அவர்களின் பெயர்கள் வருமாறு;

1. பாலேந்திரா, வண்ணார்பண்ணை.
2. சாந்தி, மாதகல்.

### தபால் ஊழியர் வேலை செய்ய மறுப்பு

நல்லூர், ஜன.7

யாழ். பிரதம தபால் கந்தோர் ஊழியர்கள் நேற்று வேலை செய்ய மறுத்தனர். ஊழியர் வரவும் மிகமிகக் குறைவாக இருந்தது.

கவுண்டர்களில் எந்த வித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறவில்லை.

தபால் கந்தோரை உடனடியாக வேறிடத்துக்கு மாற்றுமாறு ஊழியர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தபால் கந்தோர் கட்டடம் துப்பாக்கி குண்டுகளினால சேதப்படுத்தப் பட்டுள்ளது. கண்ணாடிகள் உடைந்துள்ளன.

குவைத்தில் வேலைவாய்ப்பு
★ மோட்டோர் மெக்கானிக்
★ ஓட்டோ வயரிங்
★ ஸ்பிறே பெயின்ரர்
நன்கு அனுபவம் உள்ளவர்கள்
அத்தாட்சிப் பத்திரத்துடன்
உடன் தொடர்பு கொள்ளவும்
லிப்ருஸ் லிமிட்.
R. G கட்டிடம், 60, Sea Beach Road,
70,ஸ்ரான்லி வீதி, Pettah.
யாழ்ப்பாணம். T' Phone:- 29148

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், வெளியிட்ட திகதி 07-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org